பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

Nallur Branch Library

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 10 சனிக்கிழமை (25-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 240

# ராணுவ நடவடிக்கைகள் குறித்து பிரிட்டிஷ் நிறுவனங்கள் கவலை

## அப்பாவிப் பொதுமக்களை பாதுகாக்க வேண்டுகோள்

லண்டன், ஜூலை 25

யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பது குறித்து பிரிட்டனின் உதவி வழங்கும் நிறுவனங்கள் ஸ்ரீலங்கா அரசிடம் கவலை தெரிவித்துள்ளன.

உள்நாட்டு யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்க ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கும்படியும் சம்பந்தப்பட்ட சகலரையும் அந்நிறுவனங்கள் கோரியுள்ளன.

இலங்கையின் உதவித் திட்டங்களில் சம்பந்தப்பட்டுள்ள ஐந்து பிரிட்டிஷ் நிறுவனங்களே தமது கவலையை வெளியிட்டிருக்கின்றன.

இது தொடர்பாக —

ஐந்து நிறுவனங்களின் சார்பில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் தனித்தனிக் கடிதங்கள் கடந்த புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஐந்து நிறுவனங்களின் சார்பிலும் கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் [Christian Aid] இயக்குனர் கலாநிதி மைக்கல் டெய்லர் இக் கடிதங்களில் கையெழுத்திட்டுள்ளார்.

இக் கடிதத்தை அனுப்பி வைத்த ஐந்து நிறுவனங்களில் ''அகதிகள் நலன் காக்கும் பிரிட்டிஷ் அமைப்பும்'' ஒன்றாகும்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

ஜி. சி. ஈ. (உ,த) பரீட்சை:

## முதல் தொகுதி வினாத்தாள் செவ்வாய் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான முதல் தொகுதி வினாத்தாள்களை, எடுத்துக் கொண்டு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் எதிர்வரும் செவ்வாயன்று விமான மூலம் பலாலி வருவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

''மெரினால்'' கப்பல் மூலம் பலாலியிலிருந்து வினாத்தாள்கள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்து வரப்படும் என்றும் கொழும்பில் இருந்து யாழ் கல்வி அலுவலகத்துக்கு நேற்றுத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது.

வடக்கில் நடைபெற உள்ள வேறு சில பரீட்சைகளின் வினாத்தாள்கள் மற்றும் ஆவணங்களையும், 1991 ஆம் ஆண்டுக்கான ஜி. சீ. ஈ. உயர்தர விசேட பரீட்சையின் பெறுபேறுகளையும் கல்விப் பணிப்பாளர் தம்முடன் எடுத்து வருவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-5-162)

பல்கலைக்கழக அனுமதி:

## ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் விசேட மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

1990 ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கு, வடக்கு - கிழக்கில் நடந்த விசேட உயர்தர பரீட்சைக்கு அதிக வெட்டுப் புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டது தொடர்பாக விசேட மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட மாநாட்டுக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமை வகிப்பார் என்றும் —

உயர்கல்வி அமைச்சின் முடிவு குறித்து விரிவாக ஆராயப்பட்டு, நிலைமை மீள் பரிசீலனை செய்யப்படும் என்றும் — அறியவந்துள்ளது.

விசேட பரீட்சைக்கு அதிக வெட்டுப் புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டதால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக, யாழ் அரச அதிபர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

அப்போதே ஜனாதிபதி இவ்விடயத்தை ஆராய்வதற்கு விசேட மாநாடு ஒன்றை நடத்த இணக்கம் தெரிவித்தார் என்று கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(அ-5-162-15)

## நீர் இறைக்கும் இயந்திரம் வடக்கே எடுத்து வர அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 25

விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீர்இறைக்கும் இயந்திரங்களை வடக்கே எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக யாழ் அரச அதிபர் திரு. கா மாணிக்கவாசகர் கொழும்பில் நடத்திய பேச்சுக்களை அடுத்து, ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக நேற்று யாழ் செயலகத்துக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(உ-5-162)

## உணவுப் பொருள் எடுத்துவர மேலதிக கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு உணவுப் பொருள்களை எடுத்து வரும் பொருட்டு அடுத்த மாதம் தொடக்கம் மேலதிகமாக கப்பல் ஒன்று சேவையில் அமர்த்தப்படும்.

கொழும்பில் நடைபெற்ற உயரதிகாரிகள் மாநாட்டில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

குடாநாட்டிற்கான தரைமார்க்கமான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை யாழ். அரச அதிபர் இந்த மாநாட்டில் விளக்கிக் கூறினார்.

உணவுப் பொருள்களைக் கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு ஆகக் குறைந்தது மற்றுமொரு கப்பலையாவது சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார்.

அதனையடுத்தும், அத்தியாவசிய சேவைகள் நா...

[7 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலியில் ஹெலி சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

கிளாலி கரையோரப் பகுதியில் நேற்று அதிகாலை ஹெலி ஒன்று கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தது. தெய்வாதீனமாக சேதம் ஏதும் ஏற்படவில்லை.

(ஓ)

## மண்டைதீவு படையினர் சூடு

குருநகர், ஜூலை 25

மண்டைதீவு முகாமில் இருந்து நேற்று நண்பகல் வேளை யாழ்நகர் கரையோரப் பகுதிகளை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. சுமார் அரை மணி நேரம் தாக்குதல் நீடித்தது.

இதேசமயம், பிற்பகல் 3.15 மணியளவில் விமானம் ஒன்று யாழ். நகரப் பகுதியைச் சுற்றி நோட்டமிட்டுச் சென்றது.

(ஓ-51-131)

## சர்மா இன்று பதவி ஏற்பு

புதுடில்லி, ஜூலை 25

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா இன்று சனிக்கிழமை காலை 11.15 மணியளவில் பதவி ஏற்கின்றார்.

நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் நடைபெறும் இவ்வைபவத்தில் புதிய ஜனாதிபதிக்கு பிரதம நீதியரசர் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார்.

(ஓ-எ)

## புனித யாகப்பர் திருநாள்

குருநகர், ஜூலை 25

புனித யாகப்பர் ஆலய திருநாள் இன்று சனிக்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

ஆலயம் உருவாக்கப்பட்ட 131 ஆம் ஆண்டையும், தனிப் பங்காக இயங்கத் தொடங்கிய 100 ஆவது ஆண்டையும் ஒட்டி இவ்வருடத் திருநாள் சிறப்புப் பெறுகிறது.

இன்று அதிகாலை 5.15 ...

[7 ஆம் பக்கம் பார்க்க]

## ஜெயலலிதா மீது வழக்கு தொடர கருணாநிதி முடிவு

சென்னை, ஜூலை 25

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீது அதிகார துஷ்பிரயோக வழக்குத் தொடர அனுமதி வழங்குமாறு கோரி தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி மாநில ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்குக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

சென்னையில் காணி ஒன்றை ஜெயலலிதா கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பாகவே அவர் மீது வழக்குத் தொடர கருணாநிதி அனுமதி கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட காணியின் பெறுமதியிலும் பார்க்க 2 கோடி ரூபா குறைவாகக் கொடுத்தே அக்காணியை முதலமைச்சர் கொள்வனவு செய்தார் என்றும் —

இது விஷயத்தில் அதிகார துஷ்பிரயோகம் இடம்பெற்றிருப்பதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்திருக்கின்றார்.

[7 ஆம் பக்கம் பார்க்க]

## 4 தமிழ்ப் பெண்கள் கதிரவெளியில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 25

மட்டக்களப்பு - கதிரவெளியில் கடந்த 20 ஆம் திகதி இராணுவத்தினரால் நான்கு தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கதிரவெளியைச் சேர்ந்த சித்திரவேல் கனகம்மா, வாகரையைச் சேர்ந்த இராசையா பாமா, தம்பிப்பிள்ளை தங்கம்மா, ஆண்டான் குளத்தைச் சேர்ந்த மார்க்கிறட் ஆகிய நான்கு குடும்பப் பெண்களே கைதானவர்களாவர்.

(ஓ-5)

## திருமலையில் சுற்றிவளைப்பு; இளைஞர் சூட்டுக்குப் பலி

திருகோணமலை மாவட்டம் சம்பூர், இலக்கந்தை மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது ராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு — கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இந்திரன் (வயது 16) என்ற இளைஞரே பலியானவர் ஆவார்.

தோப்பூர் இராணுவத்தினரே இவரை சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை கங்குவேலியைச் சேர்ந்த சுந்தரம் கோணலிங்கம் (வயது 40) என்பவர் சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-5)

**நன்னீரை நச்சாக்கினால் கண்ணீரே மிச்சமாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல. நோ. கூ. சங்கம் - வரைவுள்ளது

## முக்கிய அறிவித்தல்

### விசேட பொதுக் கூட்டம் பிற்போடல்

26 - 7 - 92 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த விசேட பொதுக்கூட்டம் பின்போடப்பட்டுள்ளது. இதற்குரிய அறிவித்தல்கள் சகல பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்படும்.

சூ சிறில்
தலைவர்.

பு. நவரத்தினம்
செயலாளர்.

யாழ். ப. நோ. கூ. சங்கம் - வ. து.,
291 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
24 - 7 - 92

(சி 2774)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

உதயம்: 31 — 04 — 1944



அஸ்தமனம்: 26 — 06 — 1992

செல்வி

### பத்மாவதி பாலசிங்கம்

[ஆசிரியை, யா / வேலணை சரஸ்வதி வித்தியாலயம்]

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து, சகல விதத்திலும் சிறப்பித்து, ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அதிபர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவிகள், மற்றும் உற்றார், உறவினர்கள் யாவருக்கும் எமது நன்றிகள்.

அந்தியேட்டிக்கிரியை, அன்னார் வசித்த இல்லத்தில் நாளை (26-07-1992) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். ஆகவே அவரது ஆத்ம ஈடேற்றச் சடங்கில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்.

13/3, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

[5174]

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 — 05 — 1954



உதிர்வு: 25 — 07 — 1983

### சிவசுப்பிரமணியம் சிவநாதன்

T. S. K. V. - BROS [களுத்துறை]

மல்லிகையும் மலர்ந்த முல்லையும், தம் மனம் கோணியுன் புன்னகைக்கு முகம் நாணும் மாமலையும், கவரிமானினமும் உன்குணமறிந்து தம் தலைகுனியும் மாரி மழை மேகம் சிவநாதா! ஓயாது சொரிகின்ற எம் கண்ணீரைக் கண்டோயும், வாரி வளர்த்தெடுத்த பெற்றோரும், வாஞ்சையுடன் சிவநாதா என்று நாமும் வாழ்கின்றோம்.

இங்கு உன்நினைவு நீங்காது:
தாய், சகோதரங்கள்,
மைத்துனர்மார்.

திருவேரகம்,
வேலணை மேற்கு.
வேலணை.

[5196]

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம் -
இலங்கை.

### இசைக்கலைமணி/ நாட்டியக் கலைமணி

### அனுமதித் தேர்வு 1991/92

மேற்படி பரீட்சைக்கு தவிர்க்க முடியாத காரணங்களால் சமுகமளிக்க இயலாத மாணவர்கள் 29 - 08 - 1992 சனிக்கிழமையன்று காலை 9 மணிக்கு ஏற்கனவே அறிவித்த அறிவுறுத்தல்களின் படி தகுந்த ஆவணங்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எதுவித காரணங்கள் குறித்தும் பிறிதொரு நாள் நேர்முகப் பரீட்சை வைக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகிறோம்.

- பதிவாளர்.

[சி-2769]

## A/L 94 Chemistry

திரு. மகாதேவா
ஆரம்பம்:
01 - 08 - 1992

அனுமதிக்கான பரீட்சை
30 - 07 - 1992
பிற்பகல் 4.00 மணி

BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.

(சி-2776)

## அறிவித்தல்

### கல்விப் பட்டப்பின் டிப்ளோமா ஆண்டுத் தேர்வு 91

கல்விப் பட்டப்பின் டிப்ளோமா முழுநேரம், பகுதிநேரம் - 1, பகுதிநேரம் - பகுதி 11 ஆகிய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பங்களைத் தேர்வுகள் கிளையில் பெற்று, பூர்த்திசெய்து உதவிப் பதிவாளர்/தேர்வுகள் அலுவலகத்தில் 92-09-04 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் செலுத்தி பல்கலைக்கழக காசாளரிடம் சமர்ப்பித்து அதற்கான பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

உதவிப்பதிவாளர்/
தேர்வுகளும்
அனுமதியும்.
யாழ். பல்கலைக்கழகம்.

[சி-2770]

## School of Fine Arts
## கவின் கலைகள் பயிலகம்

2 வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி

### "கலைக்கதம்பம்"

காலம்: ஜுலை 26, 27 (ஞாயிறு, திங்கள்)
மாலை 6 மணி

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

26 - 07 - 92 தலைமை: திரு. சி. வேலாயுதம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

27 - 07 - 92 தலைமை: பேராசிரியர் கா. சிவத்தம்பி
(யாழ். பல்கலைக் கழகம்)

பிரவேசம் இலவசம்

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலாளர்

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

(சி-2775)

## திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

## தொடர் நிகழ்வுகள்

25-07-92 சித்திரக் கருத்தரங்கு
26-07-92 } கவின் கலைய 'கலைக் கதம்பம்'
27-07-92 } மாலை 6 மணி
28-07-92 பண்பாட்டுக் கருத்தரங்கம்
30-07-92 இலக்கிய அவை

கருத்தரங்க — அவைக் கூட்டங்கள் மாலை 5 மணி

இடம்: மன்ற அரங்கம்,
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

[சி-2771]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### வேலுப்பிள்ளை இராமநாதன்

(சந்திரன்)

தோற்றம்: 01 — 11 — 1960
மறைவு: 06 — 08 — 1991
திதி: 25 — 07 — 1992

ஓராண்டு சென்றாலும் - உன்னை
ஒரு நாளும் மறவோம்.
உன் ஆன்மா சாந்திக்காய்
உயிர் உள்ளவரை இறைஞ்சுவோம்.

ஆ. வேலுப்பிள்ளை -
குடும்பத்தினர்.

குஞ்சியொலிலை,
புலோலி தென் மேற்கு.

[21896]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

# வீரவணக்கம்

மண்ணில் முளையாக:

25 - 07 - 1966



மண்ணில் விதையாக:

10 - 07 - 1992

முன்னாள் தீவகத் தளபதியும்
சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவின்
விசேட தளபதியுமான

## மேஜர் கிண்ணி (அசோகன்)

**கந்தசாமித்துரை - ரவீந்திரன்**
வேம்படி, வல்வெட்டித்துறை.

> சிறப்புப்படை அணியின் விசேட தளபதியாய்
> இறப்பே வரினும் மறப்போர் புரிந்தவனாய்
> பிறப்பின் பெருமையை வீரத்தால் பெற்றவன் - நீ
> களப்பலி வீரர்களின் கண்ணிமை தளபதியாய்
> வரிப்புலி வீரர்கள் முன் நின்று களப்பலி ஆனவனே
> உன் படை அணி - நெருப்பாற்றைக் கடந்தும்
> உன் கனவை நனவாக்கும்.

-நண்பர்கள்.

விளம்பர இல: C/2768

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

செல்வநாயகம் நினைவுப் பேருரை, Education & Human Right in Sri-Lanka, The First Seven Chelvanayagam Memorial Lectures & Historical Foundation of the Economy of the Tamils of North Sri - Lanka விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-2933]

---

தாவடி, மானிப்பாய் றோட்டில் பெரிய வீடு நாலரைப் பரப்புக்காணியில், வாங்க விரும்புவர் நேரில் வரவும். இல. 1, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. (21871)

---

பாண்டியன்தாழ்வு சந்தனமாதா வீதியில் இரண்டு பரப்பு வீடு நன்னீர் கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இ. ஜெயசிங்கம், சட்டத்தரணி, சந்தனமாதா வீதி, யாழ்ப்பாணம். [21875]

---

Puret❓d Dobermann Pincher X Rhodesian Ridgeback நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நல்ல இன புறாக்களும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21883)

---

பென்ரம் (Bantam) சேவல்கள், சேவல் குஞ்சுகள், முட்டையிடும் நிலையிலுள்ள பேடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: கிவீ பட்ப்பிடிப்பாளர்கள் 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (21889)

---

லோன்றிக்கு உரிய இரண்டு ஸ்திரிக்கை பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். P. சிங்கம், இல. 59, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (I. C R C அருகாமை) (21891)

### மணமகன் தேவை

இந்து (12 இல செவ்வாய், அத்தம்), 38 வயது சைவ போசன அழகிய மணப்பெண்ணுக்கு உத்தியோகம் வெளிநாடு, சொந்தத் தொழில் செய்யும் மணமகன் தேவை உத்தியோகத்திலுள்ள 33 வயது சகோதரனுடன் மாற்றுக கலியாணம் பரிசீலனை செய்யலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (21886)

---

இந்து 2 இல் செவ்வாய் உத்தரட்டாதி), 28 வயது, அழகும், விவேகமுமுள்ள அரசாங்க உத்தியோகப் பெண்ணுக்கு, உத்தியோகமுள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். போதிய சீதனம் தரப்படும் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (21884)

### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். [5183]

### மாற்றுத் திருமணம்

மாற்றுத் திருமணத்தை விரும்பும் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மதம் குறிப்பிட்டு விவரமாக எழுதவும். சந்திப்பு ஞாயிறு காலை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். [21887]

### அம்பாள் திருமண சேவை

31 வயது, Electronice Engineer, சைவ மணமகனுக்கு B.Sc மணப்பெண்ணும், 33 வயது, Bank Staffக்கு A/L மணப்பெண்ணும் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சிவசாமிக்குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவிலடி, நல்லூர். [21880]

### விநாயக திருமண சேவை

பிரஜா உரிமையுடன் நல்ல பதவியில் ஜேர்மனியில் கடமையாற்றும் 1957இல் பிறந்த மணமகனுக்கு (மூலம்) திவுப் பற்றுள்ள மணமகள் தேவை. இன்னும் பெண் விரிவுரையாளர், பட்டதாரிகள் ஜாதகங்களும் உண்டு. தொடர்பு: கடிதமூலம், நேரில் சுவாமியார் இராஜகுலசிங்கம், இல. 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம். (21877)

### திருமண சேவை

யாழ். இந்து 30 வயது நிரம்பிய B. Sc. சிவில் எஞ்ஜினியருக்கு நட்சத்திரம் உத்தராடம், 1 ஆம் பாதம், செவ்வாய் 7 இல், லக்கினபாவம் 12/16 உள்ள படித்த, அழகிய பெண் விரும்பத்தக்கது ABCDE லிவாகப் பொருத்துனர், இல. 20, சண்டி வீதி சுன்டிக்குளி. [21888]

### மணப்பெண் தேவை

கொழும்பு வந்து திருமணம் செய்யும், றோமன் கத்தோலிக்க கனடாவிலுள்ள 33, 32, 30 வயது மணமக்களுக்கு தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [21885]

### வெளிவந்துவிட்டது

92 August விஞ்ஞான பாடத்திற்கான மூலமாதிரிப் பரீட்சை வினாக்களும் விடைகளும் 91 August, டிசேடம்-92 பரீட்சையின் வினாக்களும் விடைகளும் விற்பனைக்கு உண்டு. 'A' Level Centre, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-2935]

---

91 August டிசேடம் 92 விஞ்ஞான பாடங்களின் விடைகள் விற்பனையில். 'A' Level Centre, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி 2924]

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத் தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சையின வினாத் தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன Bond Book Stall, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-2931]

---

ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை, 1992- 07- 26 ஞாயிறு காலை 9-15 மணிக்கு நடைபெறும். இப்பரீட்சையின் வினா-விடை வகுப்புகள் செவ்வாய், வியாழன் கிழமைகளில் மாலை 3-30 மணிக்கு இலவசமாக நடத்தப்படும். ''நாவலர், கல்வி கழகம்'', நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி. (21868)

---

ஆண்டு 5- புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 26-07-92 ஞாயிறு மு. ப. 7. 00, மு ப. 10 00 நேரங்களிலும், ஆண்டு 4 பரீட்சை 01- 08- 92 சனி அதே நேரங்களிலும் நடைபெறும். பதிவு செய்யவும், புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [21862]

### தவறிவிட்டது

22-7-92 அன்று கந்தரோடையிலிருந்து அரியாலை வரையில் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்கையில் எனது சொந்த சைக்கிள் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும் சன்மானம் தரப்படும். க. இராமச்சந்திரக்குருக்கள், சிவன் கோவிலடி, சுன்னாகம். [4922]

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் ''அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்'', இல. 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

### வரோதயன் சேவை

33 வயது, 4 இல் செவ்வாய், அவிட்டம் 3, பாவம் 7/23, வியாபாரம், சித்திரை 4, 12இல் செவ்வாய், பாவம் 25/42, ஜேர்மனி மணப்பெண்கள் தேவை. வேறு தேர்வுகளும் உண்டு. சோதிடம் பார்க்கப் படும். காலை 10 00 மணி வரை வரோதயன், திருவீதி, உரும்பராய் வடக்கு. [21876]

### சங்கீதம்

தவணைத் தேர்விலே கூடுதல் புள்ளிகளைப் பெறுவதற்கு சங்கீதம் வினா-விடை உதவுகிறது. அனைத்துப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [21823]

### வினா - விடைகள்

G. C E A/L, O/L மாணவர்களுக்கு கடந்தகால கணக்கியல் வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B. Com.) றோயல் கல்லூரி, கிடைக்குமிடங்கள்: S. K சாமி அன் கோ, நெல்லியடி, மண்டேலா ரேடர், மகிமிஸ் புத்தகசாலை, யாழ்ப்பாணம், கனகா புத்தகசாலை பருத்தித்துறை. [21822]

### வர்த்தகமும் கணக்கீடும்

ஆண்டு 9, 10, 11 வர்த்தகமும், கணக்கீடும் பகுதி I, 200 வினாக்களுடனும், விடைகளுடனும் வெளிவந்துவிட்டது ஆக்கம்: N. ராஜன் B. Com, விலை 30/-. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் [சி-2936]

### இந்து நாகரிகம்

இந்து நாகரிகம் - வாராந்த இதழாக வெளிவருகிறது. இதழ்-5 விற்பனையாகிறது. விலை ரூபா 6/- மட்டும். ஆசிரியர்: க. சி. குலரத்தினம் வெளியீடு: பூபாலசிங்கம் புத்தகசாலை (சி-2939)

## பருப்பு விலை குறைப்பு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மஞ்சள் ரக பருப்பின் விலையை மூன்று ரூபா ஐம்பது சதத்தினால் குறைத்துள்ளது.

ஒரு கிலோ மஞ்சள் ரக பருப்பின் விலை இனி 45 ரூபாவாக இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## கொள்ளை

திட்ட அமுலாக்கல் அமைச்சைச் சேர்ந்த ஊழியர்களுக்குரிய சம்பளப் பணமான சுமார் ஐந்தரை லட்சம் ரூபா மருதானையில் வைத்துப் பட்டப் பகலில் கொள்ளையிடப்பட்டது

பொலிஸ் சீருடை போன்ற சீருடை அணிந்திருந்த இரண்டு பேரே இக் கொள்ளையை [illegible] [இ-எ]

# நடமாடும் செயலகத்தினால்

# 39 ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். கல்விக் கோட்டத்தினால் கோண்டாவில் கொத்தணி ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட நடமாடும் செயலக அமர்வில் 39 ஆசிரியர்களின் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டன.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் நடந்த இந்த அமர்வில் 50 ஆசிரியர்கள் தமது பிரச்சினைகளைத் தெரிவித்தனர்.

அவற்றில் 39 ஆசிரியர்களின் பிரச்சினைகள் உடனடியாக தீர்த்து வைக்கப்பட்டன. [இ-3]

---

# ★ இசை மாலை ★

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 'இசை மாலை' நிகழ்ச்சி

## எதிர்வரும் யூலை 28ஆம் திகதியிலிருந்து

ஆரம்பமாகின்றது

இடம்: காசிப்பிள்ளை அரங்கு — யூலை 28 அரியாலை
யாழ் பல்கலைக் கழகம் — யூலை 29
சிவப்பிரகாச வித்தியாசாலை — யூலை 30 சங்கானை

காலம்: மாலை 7-00 மணி

நுழைவுச் சிட்டுக்கள்:

| | | | |
|---|---|---|---|
| ரூபா | 1 000/- | — | குடும்பத்தினருக்குரியது |
| ரூபா | 500/- | — | குடும்பத்தினருக்குரியது |
| ரூபா | 100/- | — | இருவருக்குரியது |
| ரூபா | 50/- 25/- | — | தனி ஒருவருக்குரியது |
| ரூபா | 10/- 5/- | — | பாடசாலை மாணவர்களுக்குரியது |

ஏனைய இடங்களுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— நிர்வாகத்தினர், செஞ்சோலை.

[21893]

---

யாழ். பல்கலைக்கழக

## வெளிவாரிப் பரீட்சை 1992 செப்டம்பர்

பின்வரும் பாடநெறிகளுக்கான வினா-விடை விரிவுரைகள் 02 08-92 இல் ஆரம்பமாகின்றன.

கலைமுதற் தேர்வு (G. A. Q.)

வர்த்தக முதற் தேர்வு (First In Commerce)

முக்கியமான பகுதிகளுக்குரிய வினாக்களுக்கு விடைகள் அச்சடித்து வழங்கப்படவுள்ளன.

விவரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்:

## பட்டப் படிப்புகள் கல்லூரி,

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-2599)

---

## MODERN EDUCATION CENTRE,

நெல்லியடி.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு - 1992 / 93

★ G. A. Q.

★ First in Com.

விரிவுரைகள் 27 - 07 - 1992 திங்கள் 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ நேர அட்டவணைகளை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

★ எதிர்வரும் செப்டம்பரில் ஆரம்பமாகவிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைக்கான-

பொருளியல் - மாதிரி வினா - விடை வகுப்பு

**S. வரதராஜன் B. A. [Hons]**

ஒவ்வொரு திங்கட்கிழமையும் 3-30 — 6-30 மணி வரையும் நடைபெறுகின்றது. (கி-2943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

## குருநகர் புனித யாகப்பர் ஆலயம் 131 ஆம் ஆண்டு நிறைவில்

### தனிப்பங்கு நிலை அடைந்து

# ★ நூறாவது ஆண்டுச் சிறப்பிதழ் ★

(25 — 07 — 1992)


நூறாவதாண்டு
சிறப்புற
வாழ்த்துகிறோம்!

**பி. ஜ. பர்னான்டோ**
542 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[யாழ். அரசினர் வைத்தியசாலை முன்பாக]

**செல்வா ஹாட்வெயர்ஸ்**
192, பாங்ஷால் வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

**ரேடியோ மனுவல்**
121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**யூட் போட்டோ**
51, 4ஆம் குறுக்கு வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

**ஒளி இல்லம்**
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆலய அருகாமை)

**ரத்தினா ஸ்ரோர்ஸ்**
287, பாங்ஷால் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

**அஜந்தாஸ் புடவை மாளிகை**
54, பெரிய கடை,
கிளை: 25, பாங்ஷால் வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

**அ. கிளபோடாசியஸ்**
27, புதிய கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

**புனிதவளன் விளையாட்டுக் கழகம்**
யாழ்ப்பாணம்.

**புதிய லக்ஸ்மன் கபே**
குருநகர்,
யாழ்ப்பாணம்.

**R. சபாநாயகம்**
2ஆம் குறுக்கு வீதி,
குருநகர்.


# தனிப்பங்காகி 100 ஆண்டுகள் நிறைவு காணும் யாகப்பர் பங்கு

1961ஆம் ஆண்டில் நூற்றாண்டைப் பூர்த்தி செய்து 1986ஆம் ஆண்டில் 125 ஆண்டுகளை நிறைவு செய்து இவ்வாண்டில் 131 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் யாழ்ப்பாணம் குருநகர் - சந்தியோகுமையோர் - புனித யாகப்பர் ஆலயம் யாழ். மறை மாவட்டத்தில் தனியானதோர் பங்காகி இவ்வாண்டு 100 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.



குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் கம்பீரமான தோற்றம்

இப்பங்கு தனித்து இயங்குவதற்கு முன்னர் ஆசனக் கோவில், சந்தியோகுமையோர் கோவில், அடைக்கல மாதா கோவில், புதுமை மாதா கோவில், ஆகிய ஆலயங்களை உள்ளடக்கி இருந்தது. குருக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த காரணத்தினாலேயே இவ்வாறு இயங்கி வந்தது. பங்கின் பணிகள் பல்கிப் பெருகவே இப்பங்கு தனியானதோர் சந்தியோகுமையோர் பங்காகப் பரிணமித்தது. 1892ஆம் ஆண்டில் இப்பங்கு இயங்கத் தொடங்கிற்று.

இப்பங்கில் பங்குத்தந்தையாக 17 - 07 - 1892 முதல் அருட் தந்தை லேகான் அவர்கள் செயற்படத் தொடங்கினார். அவரது மேய்ப்புப் பணியில் தொடங்கப்பட்ட இப்பங்கு இன்று 100 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது.

இப்பங்கு - சந்தியோகுமையோர் ஆலயத்தையும் புதுமை மாதா ஆலயத்தையும் உள்ளடக்கியது. இவ்விரு ஆலயங்களையும் சார்ந்த மக்கள் இப்பங்கிற்குள் அடங்குவர்.

1664ஆம் ஆண்டில் ஞான தீட்சை பெற்றது இப்பங்கு. முன்னோர் சிற்றாலயங்களை ஆதியில் அமைத்து பின்னர் வருங்காலச் சந்ததியினரின் தேவையை முன்னிட்டு 25-07-1861இல் இதற்கு அத்திவாரமிடப்பட்டது. இப்படி கட்டி முடிக்கப்பட்ட ஆலயமே இன்று யாழ். நகரின் மத்தியில் பிரமாண்டமாய் காட்சியளிக்கும் சந்தியோகுமையோர்-புனித யாகப்பர் ஆலயமாகும். இவ்வாலயம் இப்பங்கின் சிகரமாய் துலங்குகின்றது.

டோறஸ் இராசசிங்கம்

### கலை அம்சம்

பல கலையம்சங்களை உள்ளடக்கியது இவ்வாலயம்.

அக்காலத்தில் இவ்வாலயத்தின் கட்டளைக் குரவராய் விளங்கியவர் அதி. வண. பிதா எச். சி. எச். மொறு ஆ ஓ.எம் ஐ. இவரினால் 25-07-1961இல் அத்திவாரக் கல் நடப்பட்டு மேஸ்திரி சந்தியோகு அவர்களின் திறமையினால் இப்பங்கு மக்களின் பேராதரவுடன் கட்டி முடிக்கப்பட்டது வரலாற்றுச் சம்பவங்களாகும்.

இப்பங்கு தனிப்பங்காகிய பின்னர் இப்பேராலயம் பல திருத்தங்களைக் காலத்துக்குக் காலம் பெற்றது. போர்க் காலச் சூழலில் பல தாக்கங்களைப் பெற்ற போதிலும் கம்பீரத்துடன் காட்சி தருவது இப்பங்கு மக்கள் பெற்ற பேறாகும்.

### 25 பங்குத் தந்தையர்

இதுவரை இப்பங்கில் 25 பேர் பங்குத்தந்தையராய்ப்பணி புரிந்துள்ளனர். 26 பேர் உதவிப் பங்குத் தந்தையராகப் பணியாற்றியுள்ளனர். தற்போது இப்பங்கின் பங்குத் தந்தையாக அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகள் பணியாற்றிவருகின்றார்.

இப்பங்கில் ஆண்களுக்காக சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயமும், பெண்களுக்காக சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயமும் கல்விப் பணி புரிந்து வருகின்றன. சென். ஜேம்ஸ் பாலர் பாடசாலையும் இப்பங்கில் பணி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றாண்டு கண்டோம்!

தனித்துவத்தைப் பேணிய-
தோர் - புதிய
தனிப்பங்காய் மிளிர்கை-
யிலே கோயிலது;
தன்னிகரற்ற சேவைகளால்-
இப் பதியில்
இன்னமுதாய் நூற்றாண்-
டைக் கண்டதுவே!

— குருநகர் 'யோகி'

## பங்குத் தந்தை ஆசி

புனித யாகப்பர் ஆலயத்தின் திருவிழாவையொட்டியும், அப்பங்கு தனிப்பங்காக ஸ்தாபிக்கப்பட்ட 100ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சியைக் கண்டும் களிகூரும் பெரும் பாக்கியம் பெற்றுள்ளோம். இதற்காக நாம் இறைவனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இக் காலத்தில் புனித யாகப்பர் எமக்கும், இந்த உலகத்திற்கும் அளித்த விசுவாச வாழ்வை ஏற்று வாழ்வோம்.

குருநகர் மக்கள் இறை அன்பைப் பெற்று தங்கள் பாதுகாவலராம் புனித யாகப்பரின் பராமரிப்பில் ஆறுதலடைந்து, இறை மக்களாக வாழ வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன்.

பி.எம். இம்மானுவேல்.

பங்குத்தந்தை,
புனித யாகப்பர் ஆலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
23-07-1992.


நூறாவதாண்டு
சிறப்புற
வாழ்த்துகிறோம்!

**நா. இரத்தினம்**
(றியோ)
சின்னக்கடை.

**சத்தியா பேக்கரி**
96 (200), பாங்ஷால் வீதி,
சின்னக்கடை.

**மாணிக்கம் ஸ்ரோர்ஸ்**
16, குருநகர்,
புதிய சந்தை.

**ஜெயரூபன் ஸ்ரோர்ஸ்**
15, புதிய சந்தை,
குருநகர்.

**ஜெயபாரத கபே**
52, சின்னக்கடை வீதி,
குருநகர்.

**சிவா ஸ்ரோர்ஸ்**
(பழக்கடை)
20, நவீன சந்தை,
குருநகர்.

**எஸ். என். பி. களஞ்சியம்**
379, பீச் றோட்,
குருநகர்.

**மேரிமாதா ஸ்ரோர்ஸ்**
16A, பீச் றோட்,
குருநகர்.

**கன்னிகா நகை மாளிகை**
உரிமையாளர்:
கு. கதிரவேல்
17/3, பீச் றோட்,
குருநகர்.

**தேன்நதி பேக்கரி**
204, பாங்ஷால் வீதி,
சின்னக்கடை.

தொகுப்பு:
ரி. பி. லிங்கம்
ஒழுங்கு
கி. கிறிஸ்த்தோப்பர்
சி. தார்சீசியஸ்

[விளம்பர இல. சி-2597]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் மீது அமெரிக்கா மீண்டும் போர் தொடுக்கும்?

நியூயோர்க், ஜூலை 25

மீண்டும் தேவை ஏற்பட்டால் ஈராக் மீது அமெரிக்கா இராணுவ ரீதியாகத் தலையிடத் தயங்காது;

இவ்வாறு கூறினார் வெள்ளை மாளிகைப் பேச்சாளரான மார்லீன் பிற்ஸ்வாட்டர்.

ஈராக்கின் அணு ஆயுதக் கிடங்குகளைப் பரிசீலித்து வரும் ஐ. நா. நிபுணர் குழு சில இடங்களைப் பார்வையிட ஈராக் அனுமதி மறுத்ததை அடுத்தே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

ஐ. நாவின் போர்நிறுத்த ஒப்பந்த விதிகளை ஈராக் மீறுமேயானால் அமெரிக்கா பார்த்துக்கொண்டிருக்க மாட்டாது எனவும் அவர் கூறுரைத்தார்.

ஈராக் விவசாய அமைச்சு அமைந்துள்ள கட்டடப் பகுதியைப் பார்வையிட கடந்த 18 நாட்களாக ஐ. நா. குழு மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஐ. நா. குழு அமைச்சுக் கட்டடத்தை அணுகியபோது ஈராக்கிய மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடி ஆர்ப்பாட்டம் செய்து, அவர்களைத் தூஷித்ததோடு கட்டடத்தினுள் அவர்கள் செல்லவிடாதும் தடுத்தனர். இதை அடுத்து குழு பிரதிநிதிகள் தமது தரிப்பிடத்துக்குத் திரும்பி உள்ளனர்.

ஐ. நா. குழு பிரதிநிதிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அமெரிக்கா ஈராக் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் எனவும் வெள்ளை மாளிகை பேச்சாளர் எச்சரித்துள்ளார். [இ-10]

# தொழிற் பயிற்சி நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணத்தில் உள்ள தென்னிந்திய திருச்சபையின் தொழில் பயிற்சி நிலையம், இன்று சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு. பேராயர் மகாகனம் டி.ஜே. அம்பலவாணர் அவர்களால் நான்காம் குறுக்குத் தெருவில் உள்ள நகரப்புற பணிமனையில் திறந்து வைக்கப்படும். [இ-எ]

# தொண்டாவுக்கு சிங்கப்பூரில் விழா

கொழும்பு, ஜூலை 25

தொண்டமான் முத்து விழா மலர் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் நடைபெறவிருக்கிறது.

அமைச்சர் தொண்டமானின் 80ஆவது பிறந்த தினம் அடுத்த மாதம் 30ஆம் திகதி வருகின்றது. அதனை முன்னிட்டு சிங்கப்பூர் தமிழர்கள் இவ் விழாவை ஒழுங்கு செய்துள்ளார்கள்.

சிங்கப்பூர் இலக்கிய அரங்கில் நடைபெறும் இவ் விழாவில் அமைச்சர் தொண்டமான் கலந்து கொள்கிறார்.

# அரசியல்வாதிகளை நம்பினால் பிரச்சினை தீராது

## துணை அமைச்சர் கூறுகிறார்

அரசியல்வாதிகளை நம்பினால் பிரச்சினை தீராது; மதத் தலைவர்கள் தான் முன்வந்து பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

தகவல்துறை துணை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் நாட்டுப் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்கப்போவதில்லை. சுதந்திரக்கட்சி என்ன கூறப்போகிறது என்பதை அறிய ஐக்கிய தேசியக் கட்சி பார்த்துக் கொண்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி எதனைக் கூறப்போகிறது என்பதை அறிய சுதந்திரக்கட்சி காத்து இருக்கிறது.

அரசியல்வாதிகளுக்கு தேவையானது எல்லாம் அதிகாரமே.

அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; அடுத்த சந்ததியைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றவே அவர்கள் ஆசைப்படுகின்றார்கள். பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி பிரேமதாச தன்னாலான முயற்சிகளை எடுத்து வருகின்றார். ஆனால் அவராலும் தீர்க்க முடியாதுள்ளது.

இவ்வாறு திரு. ரணசிங்கா மேலும் தெரிவித்தார்.

(திரு. ரணசிங்காவின் உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் முன்பக்க தலைப்புச் செய்தியாக வெளி வந்திருந்தது) (இ-எ)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 04 — 1966

மறைவு: 25 — 07 — 1988

**கதிரவேலு ஜெயக்குமார்**

என்றும் உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

தந்தை, தாய், சகோதர, சகோதரிகள், மைத்துனிமார்கள், மைத்துனர், பெறாமக்கள், மருமக்கள்.

உரும்பராய் கிழக்கு, உரும்பராய்

[21845]


தனிப்பங்காகி...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றி வருகின்றது.

இப்பங்கு தனிப்பங்காகிய பின்னர் இவ்வாலயத்தின் பங்கு மக்களில் 10 பேர் அருட் தந்தையராகவும் 9பேர் அருட் சகோதரிகளாகவும் இறை பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.

இப்பங்கு தனித்து இயங்கிய போது தண்ணீர் வசதிக்காக ஆண்களுக்கு புறம்பான கிணறும், பெண்களுக்கு புறம்பான கிணறும் அமைக்கப்பட்டிருந்தன.

இப்பங்கில் பல பக்திச் சபைகளும், கலை, கலாசாரக் கழகங்கள், மன்றங்களும், நிலையங்களும் உருவாகிப் பற்பல தொண்டுகளைச் செய்து வருகின்றன. அதன் பேறாக இப்பங்கில் வாசிகசாலையும், கலை அரங்கமும், சாரணர் இயக்கமும் உருவாகி பற்பல பணிகளைப் புரிந்து வருகின்றன.

இப் பங்கு மென் மேலும் வளர வல்லான் வழி வகுப்பாராக. இப்பங்கின் பாதுகாவலர் சந்தியோகுமையோர் - புனித யாகப்பர் உறுதுணை புரிவாராக.


பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 93**

பொருளியல்: S. வரதராஜன் B. A. (Hons )

★ சனி, ஞாயிறு வகுப்புகள் ★

10 — 11 உற்பத்திச் சாத்திய வளையி

11 — 12 சந்தைச் சமநிலை

1 — 2 தேசிய வருமானம்

ஆரம்பம்: 01-08-1992

(சி-2945) (சனி)



## ஆறாம் மாத நினைவஞ்சலி



**அமரர் வாரி இராசகிளி (கிளி)**

மலர்வு; 19-4-1941

உதிர்வு; 14-1-1992

அன்பின் இருப்பிடமே,
பண்பின் உறைவிடமே,
பாசத்தின் இருப்பிடமே,
எங்கள் இனிய பப்பாவே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
மாதங்கள் ஆறு மறைந்தாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சங்களில்
என்றும் நீங்காது நிலைத்திருக்கும்
நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை
வழி நடத்த வேண்டும். பப்பா உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவுத் துயரால் வாடும்

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்

660, கண்டி றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

[21820]



BECON

Study Centre

பாரதிதாசன்.

**A/L 93**

கணக்கியல்:

சௌந்தி

வங்கி கணக்கிணக்கக் கூற்று

ஆரம்பம்:

26 — 07 — 1992

ஞாயிறு காலை 8 மணி

[சி-2948]



**கீன்** கல்வி நிலையம்

திருநெல்வேலி.

கணக்கியல்:

A. சௌந்தி

வியாபார, இலாப-நட்டக் க/கு ஐந்தொகை

ஆரம்பம்:

26 — 07 — 1992

ஞாயிறு 12.00 மணி

[சி-2767]



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா கனகரத்தினம்**

(உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி)

தோற்றம்: 23-03-1941

மறைவு: 25-07-1988

திதி: 25 — 07 — 1992

ஆண்டுகள் யுகமாய்க் கழிந்தாலும்
அண்ணலே உங்களை மறப்போமோ?
நீங்கா உங்கள் திருமுகத்தை
நெஞ்சில் இருத்திப் பூசிப்போம்.

உங்கள் நினைவுடன்,

குடும்பத்தினர்.

56, ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

(5178)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nallur Branch Library

## உதயன்

### அன்றே தெரியும்!

நாடாளுமன்ற தெரிவுக் குழு இனப்பிரச்சினையை ஒரு போதும் தீர்க்கமாட்டாது! தெரிவுக்குழு மூலம் ஒரு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்க முடியாது!!

இவ்வாறு வெகு அப்பட்டமாக உண்மை நிலையை வெளியிட்டிருக்கிறார் தகவல் துறைத் துணை அமைச்சர் திரு. ஏ. கே. ரணசிங்கா.

தனக்குச் சரியெனப்பட்டதை தனது மனச்சாட்சி நேரில் காண்பதை ஒளிவு மறைவின்றி மிகத் துணிச்சலுடன் நாடாளு மன்றத்திலேயே வைத்துக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் ஆட்சித் தலைவரான ஜனாதிபதி தொடக்கம், ஆளுங்கட்சியின் சாதாரண உறுப்பினர் வரை தெரிவுக்குழுவைச் சிங்கள மக்களுக்குப் பிரமாதப்படுத்திக் காட்டுகின்றனர். அலாவுதீனின் அற்புத விளக்கைப் போல தெரிவுக் குழுவும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொண்டு வந்துவிடும் என்ற மாயையை உருவாக்கி வருகிறார்கள். வடக்கு — கிழக்கில் நடக்கும் போரில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் மடிந்து போகிறார்கள், அரசின் பணம் வீணே செலவாகிறது என்பதை மறைப்பதற்காகத் படைகள் விடுதலைப் புலிகளை வெல்வதாகக் கூறிப் பெரிதுபடுத்துவது போல.

ஆனால் அவர்கள் எல்லோரினதும் குட்டை அம்பலத்துக்குக் கொண்டு வந்துவிட்டார் துணை அமைச்சர் ரணசிங்கா! தெரிவுக் குழுவினால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏன் காணமுடியாது என்பதற்கான காரணத்தையும் அவர் காட்டியிருக்கிறார்.

தெரிவுக்குழுவில் பங்கு கொள்ளும் அரசியல் கட்சிகள் தமக்கு அரசியல் லாபம் தேடவே முனைகின்றன. நாட்டின் முக்கிய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு அக்கறையில்லை. அரசியல்வாதிகளுக்கு தேவையானது எல்லாம் அதிகாரமே — என்ற சரியானதும், உண்மையானதுமான காரணத்தைக் காட்டியிருக்கிறார்.

அதற்கு மேலும், நாம் இப் பத்தியில் அடிக்கடி எழுதியிருப்பது போல—

அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; அடுத்த சந்ததியைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை— என்ற உண்மையையும் அவர் ஆணித்தரமாக எடுத்தியம்பி உள்ளார்.

தாமும் ஓர் அரசியல்வாதியாக இருந்து கொண்டு அரசியல்வாதிகளின் பலவீனங்களை, குறைபாடுகளை புட்டுக்காட்டும் அளவுக்குத் திரு. ரணசிங்காவின் மனச்சாட்சி தொழிற்பட்டிருப்பது சேற்றில் மலர்ந்த செந்தாமரையை ஒத்தது எனலாம்.

இனி இதற்கு மேலாவது தென்னிலங்கை அரசியல்வாதிகள் திருந்த வேண்டும். ஆனால் அந்தளவுக்கு அவர்களுக்கு மானம், மரியாதை, ரோசம், சூடுசொரணை இருப்பதாக நம்புகிறீர்களா? இதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே இருக்கும்! வேண்டுமானால் திரு. ரணசிங்காவை அரசியலிலிருந்து விரட்டி விடுவதற்கு அரசாங்க, எதிரணித் தரப்பினர் சேர்ந்து உழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எப்படியோ, தெரிவுக்குழு வெறும் காலம் வாங்கும் கருவி; அணைத்துக் கட்சி மாநாடு போலவே அதன் கதியும் முடியும் என்பதை அக் குழு நியமிக்கப்பட்ட போதே தமிழர்கள் தெரிந்திருந்தார்கள். அமைச்சர் தொண்டமானின் யோசனையை நிலத்திற்குள் புதைப்பதற்காக பிரசவிக்கப்பட்ட பூதம் இது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

## பின்நோக்கி ஒரு பார்வை

# ஆரம்பக் கோட்பாட்டுக்கு முரணாக ஒலிம்பிக் பந்தயங்களில் அரசியல்!

[நேற்றைய தொடர்]

ஒலிம்பிக் பந்தயங்களுக்கு இடைப்பட்ட நான்கு ஆண்டுகள் ஒலிம்பியாட் எனப்படும். ஒவ்வொரு ஒலிம்பியாட்டின் ஆரம்பத்திலும் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பார்ஸலோனாவில் நடைபெறுவது 22ஆவது பந்தயமாக இருந்தாலும் 25 ஆவது ஒலிம்பியாட்டில் நடைபெறுவதால் இது 25 ஆவது ஒலிம்பிக் பந்தயம் எனப்படுகிறது.

ஒலிம்பிக் பந்தயங்களில் காலத்துக்குக்காலம் சிலவிளையாட்டுகள் நீக்கப்பட்டும், புதியவைசேர்க்கப்பட்டும் வந்துள்ளன. தற்போதைய விதிகளின்படி பந்தயங்களில் ஒரு விளையாட்டு சேர்க்கப்படுவதானால் அவ்விளையாட்டு 3 கண்டங்களிலுள்ள 40 நாடுகளில் விளையாடப்படுவதாக இருக்கவேண்டும். போட்டிகள் அனைத்தும் ஒலிம்பிக் பந்தய பூமியில் நடைபெறவேண்டும்.

### ஒலிம்பிக்கில் அரசியல்

ஒலிம்பிக் போட்டிகள் அரசியல் வேறுபாடின்றி நடைபெற வேண்டும் என்ற கூபேர்டின் கோட்பாடு அண்மைக் காலமாக மீறப்பட்டு வருகிறது. 1936ஆம் ஆண்டு பேர்லினில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களின் போது அடோல்ப் ஹிட்லர் தனது நாஜிக் கொள்கைகளை விளையாட்டுகளினூடாகப் புகுத்த முயன்றார். அதிலிருந்து ஒலிம்பிக் பந்தயங்களில் அரசியல் பல்வேறு வடிவங்களில் தலை காட்டத் தொடங்கியது.

1972ஆம் ஆண்டில் மியூனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களின் போது பாலஸ்தீன கெரில்லாக்கள் இஸ்ரேலியப் போட்டியாளர்களைப் படுகொலை செய்தார்கள்.

1980 ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் பகிஷ்கரித்தன. 1984 ஆம் ஆண்டு கலிபோர்ணியாவில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களை சோவியத் யூனியனும் அதன் தோழமை நாடுகளும் பகிஷ்கரித்தன. இனவாதக் கொள்கையை தென்னாபிரிக்க அரசு கடைப்பிடித்து வந்ததால் பல ஆண்டுகளாக பந்தயங்களில் தென்னாபிரிக்கா பங்குபற்றத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. [இம்முறை தென்னாபிரிக்கா கலந்துகொள்கிறது] இவ்வாறு ஒலிம்பிக் பந்தயங்களில் அரசியல் உட்புகுந்துள்ளது.

மேலும், ''வெற்றி பெறுவதல்ல, பங்குபற்றுவதே சிறப்புத் தருவது'' என்ற கோட்பாடும் ஒலிம்பிக் பந்தயங்களில் மறக்கப்பட்டு வருகிறது. போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக போட்டியாளர்கள் ஸ்ரெறொயிட்ஸ் எனப்படும் போதை மருந்துகளைப் பாவித்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த 1988 ஆம் ஆண்டு சியோலில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில் பென்ஜோண்சன் என்ற கனேடிய போட்டியாளர் போதைவஸ்து உட்கொண்டது கண்டு பிடிக்கப்பட்டு அவருக்கு வழங்கப்பட்ட தங்கப் பதக்கம் மீளப் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட பந்தயங்களின் போது வன்முறைச்

- காந்தசாரணன் -

சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இதனால் பந்தயம் நடைபெறும் நாடுகள் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பெருமளவு செய்ய வேண்டி உள்ளது. இம்முறை பார்ஸலோனாவில் பந்தய போட்டியாளர்கள் தங்கியுள்ள ஒலிம்பிக் கிராமத்துக்கு 7 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர ஒவ்வொரு இரண்டு போட்டியாளர்களுக்கும் ஓர் இராணுவத்தினர், ஒரு பொலீஸ்காரர். ஒரு பாதுகாப்பு அலுவலர் என்ற ரீதியில் சுமார் 40 ஆயிரம் பேர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பார்ஸலோனா நகரத்தில் ஏற்கெனவே இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்தும் உற்சாகம் இழக்கச் செய்யும், வேதனை தரும் சம்பவங்கள் என்றபோதிலும் ஒலிம்பிக் போட்டிகள் பெரும்பாலும் உலகத்து இளம் சமுதாயத்தினர் ஒன்று கூடவும் அன்பயனாக ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் அளிக்கின்றன என்பது உண்மையே.

இந்த வகையில் 25 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் பார்ஸலோனாவில் இன்று ஜூலை 25 ஆம் திகதி — ஆரம்பமாகிறது. [வளரும்]

### 'தமிழன் கனவு' அறிமுக விழா

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் ''தமிழன் கனவு'' கவிதை நூல் அறிமுக விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

திரு. யோகரத்தினம் யோகி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் திரு. இளங்குமரன் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

திரு. குழந்தைவேலு, பண்டிதர் வீ. பரந்தாமன், திரு. புதுவை இரத்தினதுரை ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

''தமிழன் கனவு'' கவிதை நூல் ''சாளரம்'' வெளியீடாகும். [ஒ]

### புனித...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு திருப்பலியை பங்குத் தந்தை வண. பி.எம்.இம்மனுவேல் அடிகளும், காலை 6-30 மணிக்கு திருநாள் கூட்டுப் பாடல் திருப்பலியை யாழ். ஆயர் மேதகு வ.தியோகுப் பிள்ளை ஆண்டகையும் ஒப்புக் கொடுப்பர்.

காலை 8 மணிக்கு திருச்சொரூப பவனி ஆரம்பமாகும். [சிறப்பிதழ் 5 ஆம் பக்கத்தில்] [அ-51]

### உணவுப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்த கிளார்சைத் தொடர்ந்தும் மேலதிக கப்பல் ஒன்றை அனுப்ப கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் இணக்கம் தெரிவித்தது.

இப்போது ''குமண'' கப்பல் மாதத்தில் ஒரு தடவையே உணவுப் பொருள்களுடன் இங்கு வருகிறது. ஆகஸ்ட் 15 ஆம் திகதி மேலதிக கப்பல், உணவுப் பொருள்களுடன் கொழும்பிலிருந்து புறப்படும் என்று அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் யாழ். செயலகத்திற்குத் தகவல் அனுப்பியுள்ளார். [அ-162-15]

### பார்சிலோனா ஒலிம்பிக் இன்று ஆரம்பமாகிறது

பார்சிலோனா, ஜூலை 25

ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனா நகரில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

அங்குரார்ப்பண வைபவத்தில் 170 நாடுகள் கலந்து கொள்ளுகின்றன.

25 வகையான போட்டிகள் 1992 ஒலிம்பிக் போட்டியில் இடம்பெறுகின்றன.

257 தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொள்ள சுமார் 9 ஆயிரம் வீரர்கள் போட்டியிடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

32 ஆண்டு கால இடைவெளியின் பின்னார் முதன் முதலாக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள தென் ஆபிரிக்காவின் சார்பில் அதன் தேசியக் கொடியை போட்டி மைதானத்தில் ஏற்ற ஒலிம்பிக் கமிட்டி அனுமதி வழங்கவில்லை. தென் ஆபிரிக்காவின் தேசியகீதத்தை ஒலிம்பிக்கில் இசைக்கவும் அந்த நாட்டுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

வெள்ளை நிறத்தவரின் பெருமைகளைப் பற்றிப் பேசுவதாக தென் ஆபிரிக்காவின் தேசியக் கீதமும் தேசியக் கொடியும் அமைக்கப்பட்டுள்ளதே இத் தடைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு ஜேர்மனிகளும் இணைந்து இம்முறை ஒரு ஜேர்மனியாக ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்கின்றன. இதனால் அதிக அளவில் தங்கப்பதக்கங்களை ஜேர்மனி அள்ளிக்கொண்டு போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ராணுவத்தில் முஸ்லிம் படை வேண்டும் என்கிறார் அஷ்ரப்

கொழும்பு, ஜூலை 25

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாம் ஆயுதப் போர் ஒன்றை நடத்தவேண்டி வரும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். அஷ்ரப் தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் பேசிய போதே அவர் இப்படிக் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் போராடுவதற்காக அரசு எம்மை உற்சாகப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட இராணுவத்தில் ''முஸ்லிம் படை'' என பிரத்தியேக படை ஒன்றை அமைக்க வேண்டும் — என்று ஜனாப் அஷ்ரப் கேட்டுக்கொண்டார் என்று ''தஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (அ-எ)

### உயிர்மீட்சிக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தின் 164ஆவது ஆண்டு நிறைவையொட்டிய உயிர் மீட்சிக் கூட்டங்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் அங்கு நடைபெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் இக் கூட்டங்கள் முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறும்.

அருட் தந்தை லம்பேட் அடிகளார் இக் கூட்டங்களில் அருளுரை நிகழ்த்துகிறார். [இ]

### விண்ணப்ப திகதி பிற்போடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப திகதி பிற்போடப்படலாம் என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. [உ-15-162]

### ராணுவ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பிரதிநிதியான மல்கம் றோஜஸுடன் கலாநிதி மைக்கல் டெய்லரும் அண்மையில் இலங்கையின் வடபகுதிக்கு வந்து திரும்பினார் என்று கூறப்படுகிறது.

### முற்றுகையிட முற்படுதல்

தாங்கள் அனுப்பி வைத்த கடிதம் குறித்து கலாநிதி மைக்கல் டெய்லர் கூறியதாவது:—

இலங்கையின் வடபகுதி மீது அரசு விதித்திருக்கும் தடை குறித்தும்—

நீண்டகாலமாக அங்குள்ள மக்கள் படும் துன்பங்கள் குறித்தும்—

விமானத் தாக்குதல்களினால் அங்குள்ள பொதுமக்களுக்கு அதிகரித்து வரும் ஆபத்துக் குறித்தும்—

ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் எமது கவலையை நாம் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

இராணுவம் குடாநாட்டைச் சுற்றிவளைக்க முற்படுவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு ஆபத்து அதிகரித்துள்ளது.

இதேசமயம்—

விடுதலைப் புலிகளின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில்—

கைதிகள் விடயத்தில் ஐ. நா. அறக்கட்டளையைக் கடைப்பிடிக்கும்படியும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியை நாடுமாறும் நாம் கேட்டுள்ளோம்— என்றார்.

### இராணுவத்தின் உதவி

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட, அகதிகள் நலன் காக்கும் பிரிட்டிஷ் நிறுவனத்தின் பிரதிநிதி மல்கம் றோஜர்ஸ் கூறியதாவது:-

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டு விட்டதாக இலங்கை இராணுவத் தரப்பில் கூறப்படுகிறது. இது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி மீண்டும் தாக்குதலை நடத்தும் ஸ்ரீலங்கா இராணுவத்தினோர் உத்தியாகும். இதுதான் உதவி வழங்கும் பிரிட்டிஷ் நிறுவனங்களுக்கு பெரும் கவலைதருவதாகும். — என்றார். [உ-5]

### ஜெயலலிதா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கருணாநிதியின் இக் குற்றச்சாட்டை செல்வி ஜெயலலிதா மறுத்திருப்பதுடன், குற்றச்சாட்டை நிரூபிக்கும் படியும் கருணாநிதிக்கு அவர் சவால் விட்டிருக்கிறார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

### செல்வி சாயினி வாசுதேவன்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

சட்டநாதர் வீதி, நல்லூரைச் சேர்ந்த வாசுதேவன் யோகராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி சாயினி தனது முதலாவது பிறந்த தினத்தை, இன்று (25-07-92) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பிரான்ஸில் வசிக்கும் அருள்வரதன் மாமா, வசந்தி மாமி, சத்தியன் மச்சான், சேகர் சித்தப்பா மற்றும் ஐயா, அம்மம்மா, கொழும்பு மாமாமார், மாமிமார், சிறி மாமா, பிறேமாமாமி குடும்பத்தினர், ராமு பெரியப்பா, கமலா பெரியம்மா குடும்பத்தினர், நாதன் மாமா, மோகன்மாமா, ஆனந்தன் மாமா, கனடா பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தினர், கனடா செல்லா அன்ரி மற்றும் சுஜி அக்கா, தினேஸ் அண்ணா, ரமேஸ் அண்ணா, தர்சனா, உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் பல கலையும் பயின்று சாயீசன் அருளுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

ஜெய்சாயிராம்

34, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (21879)

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### ★ மகேந்திரன் மயூரி ★

டச்சு வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த மகேந்திரன்-சுதர்ஷினி தம்பதிகளின் செல்வப் புதல்வி மயூரி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று [25-07-92] சனிக்கிழமை பிரான்சில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா அம்மம்மா, அப்பா குடும்பத்தினர், அம்மா குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் ஆண்டவன் அருளால் பல்கலையும் கற்று வளமுடன் பல்லாண்டு வாழ்கவென இனிதே வாழ்த்துகிறார்கள். (21878)

## மரண அறிவித்தல்

### சிவலிங்கம் ஆதிமூர்த்தி

(ஓய்வு பெற்ற கட்டட இலாகாப் பரிசோதகர்)

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்கானை மேற்கு, வடலியடைப்பை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சிவலிங்கம் ஆதிமூர்த்தி 22-07-92 புதன்கிழமை காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், அரிஅரன் [Translanka Colombo], கிருபாகரன், (U.K.), காலம் சென்றவர்களான ஞானகரன், கருணாகரன், ஆகியோரின் தகப்பனாரும், சுகன்யா, பிரபாவின் மாமனாரும் அதித்தியா, அநகாயன் ஆகியோரின் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

''கந்தகோட்டம்''
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (21897)

## இன்று

குருநகர், ஜூலை 25

சில்லாலை தெற்கு, புனித யாகப்பர் ஆலயத் திருநாளை முன்னிட்டு இன்று இரவு 7 மணிக்கு ஆலய வெளி அரங்கில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். [உ-51]

## சுன்னாகம் பணிமனையில்...

யாழ்ப்பாணம், ஜூலை 25

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்களைச் சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை குறித்த விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலின் பிரதியை சுன்னாகத்தில் உள்ள உதயன் சேவை நிலையத்திலும் பார்வையிடலாம்.

போட்டிப் பரீட்சைக்கான படிவங்களையும் அங்கு பெற்றுக்கொள்ளலாம். [அ]

## இன்று ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 25

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி மேற்தரக் கிளையில் இன்று சனிக்கிழமை காலை 9.00 தொடக்கம் பகல் 12 மணி வரை ஜூலை மாதத்திற்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும். [ஒ-5]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜூலை 25

மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்துள்ள ''கிராமிய அபிவிருத்திக்கான உபாயங்கள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்றும் நாளையும் இணுவில் அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்களுக்காகவே இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஒ-க- 152]

## நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடக்கு-கிழக்கு மாகாண சேவையில் அமைய எழுதுவினைஞர்களைச் சேர்ப்பதற்காக நடைபெற்ற தேர்வில் தெரிவு செய்யப்பட்டு, தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளவர்களின் பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து யாழ் அரச அதிபர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-15-162]

## கண்காட்சி தொடரும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் விஞ்ஞானக் கண்காட்சி 27ஆம், 28ஆம் திகதிகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்த இரண்டு தினங்களிலும் ஜி.சி.ஈ. உயர்தர மாணவர்கள், உயர்தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

ஏனையோர் இன்று மட்டுமே கண்காட்சியைப் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## கிழக்கில் நிலைமையை சமாளிக்க போதிய படை

### சரத் முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 25

பதற்றம் நிலவும் கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு நிலைமையையும் சமாளிக்கப் போதிய படையினர் இருக்கின்றனர்.

கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத்முனசிங்க கடந்த வியாழன் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார். [இ-எ]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்மணி நாகலிங்கம்

திருமதி கண்மணி நாகலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை ஸ்தாபகரும், முன்னைநாள் அதிபருமாகிய காலஞ்சென்ற திரு. நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசோதிநாதன் [சு. ப. நோ. கூ. சங்கம்], செல்வநாதன், இராஜநாதன் [சாமுவேல் சன்ஸ் யாழ்ப்பாணம்], இந்திராதேவி, சபாநாதன் [எஸ். கோ. சுன்னாகம்], யோகநாதன் [நில அளவையாளர், டுபாய்], ஜெகநாதன் [இலங்கை வங்கி, கொழும்பு], வனிதாமணி [கனடா], இரவீந்திரநாதன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ந. நாகராஜா [நீர்ப்பாசனத் திணைக்களம், நாவற்குழி], நா. சாந்திநாதன் [T. A. கனடா], செல்வராணி, சறோஜாதேவி [ஆசிரியர், திருமலை], கமலாசனி, சாந்தகுமாரி [ஆசிரியை], ஞானதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் புகழுடல் இறுதிக் கிரியைக்காக இன்று சனிக்கிழமை [25 - 7 - 92] பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சபாநாதன்
[மகன்]

பொலிஸ் நிலையத்தடி,
சுன்னாகம். [4924]

### சபாபதிப்பிள்ளை இராசம்மா

காரைநகர் சின்னாலடியைச் சேர்ந்த திருமதி சபாபதிப்பிள்ளை இராசம்மா. இறைவனடி எய்திவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு சபாபதிப்பிள்ளையின் அன்புமனைவியும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் தாயாரும், சுகிர்தானந்தத்தின் (ஆனந்தாவி, பசறை) மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் காரைநகரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்களையும் நண்பர்களையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
சு. நாகேஸ்வரி.
(மகள்)

சுட்டுடை,
உபதபாற்கந்தோர் அருகாமை,
சண்டிலிப்பாய். [21900]

### திருமதி நாகம்மா சீனிவாசகம்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா சீனிவாசகம் அவர்கள் 24 - 07 - 1992 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் காலம் சென்ற நாகமுத்து சீனிவாசகத்தின் அன்பு மனைவியும், மகேஸ்வரி [இளைப்பாறிய ஆசிரியை, யா/மட்டுவில் ம. வி.], இராமநாதன் [சுங்கத் திணைக்களம், கொழும்பு], புவனேஸ்வரி, தாமோதரம்பிள்ளை [இலங்கை மின்சார சபை, கொழும்பு), காலம்சென்ற அகிலேஸ்வரி, ஜெயநாதன் [சிவநாதன்ஸ் ரெக்ஸ்ரைல்], பத்மநாதன் [கோட்டக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி], புஸ்பநாதன் [ஈஸ்வரன் பிரதர்ஸ், கொழும்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும், வன்னியசிங்கம் [இளைப்பாறிய பொறியியலாளர், வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனம்], அலோசியஸ் [நீர்ப்பாசன திணைக்களம், கொழும்பு], சிவானந்தன் [அகிலேஸ் ரேடர்ஸ், கொழும்பு], தனேஸ்வரி, சாரதாதேவி லோகநாயகி, சத்தியமோகனா இந்திராதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
கே. டி. சச்சிதானந்தம்
(சகோதரர்)

சிறீ வாசா,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (21901)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில்

பருத்தித்துறை கலைஞர் வட்டம் பெருமையுடன் வழங்கும்

வண்ணக்கலர் **சுதந்திர நாட்டு அடிமைகள்** டிராமாஸ்கோப்

இன்று 25 - 07 - 1992 இரவு 9 மணி பருத்தித்துறை திக்கமுனை மைதானம்

(சி/2950)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org